3 அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு அறிவிப்பு, ஒற்றைமாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதி, செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி.)

(ஆ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1977-78-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(இ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்பு. ஒற்றைமாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், உரிமைக் குழுவிற்கு (Commitee of Privileges)